## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

### அன்பும் நட்பும் எங்குள்ளதோ



அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்   2

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
   ஒன்றாய் கூட்டி சேர்த்ததுவே
   அவரில் அக்களித்திடுவோம் யாம்
   அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
   ஜீவிய தேவனுக்கு அஞ்சிடுவோம்
   அவருக்கு அன்பு செய்திடுவோம்
   நேரிய உள்ளத்துடனே யாம்
   ஒருவரையொருவர் நேசிப்போம்

2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
   வந்து கூடும் போதினிலே
   மனதில் வேற்றுமை கொள்ளாமல்
   விழிப்பாய் இருந்துகொள்வோமே
   தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
   பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
   நமது மத்தியில் நம் இறைவன்
   கிறிஸ்து நாதர் இருந்திடுக

3. முக்தி அடைந்தோர் கூட்டத்தில்
   நாமும் ஒன்றாய் சேர்ந்து மனம்
   மகிழ்ந்து கிறிஸ்து இறைவா நின்
   மகிமை வதனம் காண்போமே
   முடிவில்லாமல் என்றென்றும்
   நித்திய காலம் அனைத்திற்கும்
   அளவில்லா மாண்புடைய
   பேரானந்தம் இதுவேயாம்

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசசிந்தனை

## நம்பிக்கை:

# கருப்பொருள்: கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு

**நோக்கம்:** உறவுமுறை **நிகழ்வு:** உலக ஏழையர் தினம்

## அறிமுகம்:

நாம் அனைவரும் புனிதராக மாற வேண்டுமென தமது ஆகக்கடைசியான சுற்றுமடலில் (மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இரு) திருத்தந்தை கூறுகிறார். “ஆண்டவர்...நாம் அனைவரும் புனிதராக வேண்டுமென விரும்புகிறார், சராசரி மனிதனாக வாழ்ந்து விடக்கூடாது” என அவர் எழுதியுள்ளார். “தங்களது வாழ்நாளில் இறைவனை மகிமைப்படுத்தி, புனிதம் காண வேண்டுமென்ற ஏக்கம், பரிவிரக்கச் செயல்களில் ஒரே மனதோடு உறுதியாக ஈடுபட செய்ய வேணடும்” எனவும் திருத்தந்தை கூறியுள்ளார்.



Image: By William Chye

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## ஆரம்பப் பாடல்:

### ஒளியாம் இறையே வாராய்

ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்

1. விண்ணில் வாழும் விமலா
மண்ணில் வாடும் மாந்தர்
உம்மில் என்றும் வாழ
எம்மில் எழுமே இறைவா
ஒளியே எழிலே வருக

2. நீரும் மழையும் முகிலால்
பூவும் கனியும் ஒளியால்
உயிரும் உருவும் உம்மால்
வளமும் வாழ்வும் உம்மால்
ஒளியே எழிலே வருக

3. அருளே பொங்கும் அமலா
இருளே போக்க வா வா
குறையை நீக்கும் நிமலா
நிறையை வளர்க்க வா வா
ஒளியே எழிலே வருக 2

## உரையாடல்:

ஒரு நாள் பதமி மருத்துவமனைக்குச் செல்லும் வேளையில், சாலையில் ஒரு மாது விழுந்து கிடப்பதை அன்னை திரேசா கண்டார். அருகில் சென்று அந்த பெண்ணை உற்றுப் பார்த்தார். அவளது கால்களில் கட்டுப்போடப்பட்டு எறும்புகள் மோய்ப்பதைப் பார்த்தார்.

எலிகள் அவரது தலையைப் பதம் பார்த்திருந்தன; ஈக்களும் புழுக்களும் அவளது புண்களில் பரவிக் கிடந்தன. அங்கேயே அவள் கிடந்தாள், இறப்பது திண்ணம் என அன்னை திரேசாவுக்குத் தெரிந்தது. அருகிலுள்ள மருத்துமனைக்கு அவளை அழைத்துச் சென்றார். தொடக்கத்தில் அந்த வயதான மாதைக் கவனிக்க மருத்துவமனை ஊழியர்கள் தயக்கம் காட்டினர். அன்னை திரேசா அவர்களை மன்றாடி கேட்டுக் கொண்ட பின்னர் மருத்துவர் அந்த பெண்ணின் காயத்திற்குச் சிகிச்சை அளித்தார். “தற்காலிகமாக மருத்துவமனையில் அந்த வயதான மாது அனுமதிக்கப்பட்டாலும் பின்னர் அவள் தங்குவதற்கு நீங்கள் இடம் பார்க்க வேண்டும்” என மருத்துவர் அன்னை திரேசாவிடம் கூறினார். ஏழை நோயாளிகள் குணம் பெறுவதற்கான இடத்தைத் தேடி, அங்நகராட்சி மன்றத்தின் சுகாதாரக் கவனிப்பு மையத்தை நாடினார். அன்னை திரேசாவின் கோரிக்கையைக் கனிவோடு கேட்ட அந்த மையத்தின் தலைவர், அங்நகரிலுள்ள பிரபலமாக காளி மடத்திற்கு அழைத்துச் சென்றார். அன்னை திரேசா இந்தியர் அல்ல என்பதால் தொடக்கத்தில் சிலர் எதிர்ப்புக் காட்டினர். மனம் தளராத அன்னை திரேசா, சாலையில் சாகக்கிடக்கும் பல நோயாளிகளுக்குத் தொடர்ந்து அடைக்கலம் தந்தார். அவர்களின் காயங்களைக் கழுவி சுத்தம் செய்து, கௌரவத்துடன் சாவதற்கு அவர்களுக்கு இடம் கொடுத்தார். அவரது இந்த நடவடிக்கை பலரைத் தொட்டது, எதிர்ப்புகள் படிப்படியாக குறைந்தன. ஏழைகளையும் அவதிப்படுவோரையும் கவனிக்கும் அன்னை திரேசாவின் இரக்கச் செயலில் இதர பல பெண்களும் சேர்ந்து கொண்டனர். தங்குவதற்கு அடைக்கலம் கொடுக்கப்பட்ட ஒரு வயதான நபர் இறப்பதற்கு முன், அன்னை திரேசாவின் காதில் கூறியது, “நான் நாயைப் போல இருந்தேன், இப்போது மனிதனாக சாகிறேன், நன்றி”



### பகிர்வுக்கான கேள்வி

- உதவி தேவைப்படுவோருக்கு இரக்கம் காட்ட நம்மை தடுக்கும் அம்சங்கள் எது என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- அன்னை திரேசாவிடமிருந்து எதை வாழ்க்கை பாடமாக நாம் கற்றுக் கொள்ளலாம்?

## இறைவார்த்தை:

### லூக்கா 10: 30-35

ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்து கொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப் போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியன் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்து கொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்ட போது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார். மறுநாள் இரு தெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, “இவரைக் கவனித்துக் கொள்ளும், இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்” என்றார்.

### சிந்தனை:

- வாசகத்தைப் படித்தப் பின் நமது உள்ளங்களில் கடவுள் பேசுவதற்கு மௌனம் காப்போம்.
- நமது உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனம் பற்றிப் பகிர்ந்து கொள்வோம்.

### செயல்:

பரிவோடு உதவிக்கரம் நீட்ட வேண்டிய உங்கள் சுற்றுவட்டாரத்தில் வாழும் மக்கள், யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஏன்?

தனிநபர் மற்றும் அகிச என்ற முறையில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதற்காக சில எளிமையான ஆனால் உருப்படியான வழிகள் யாது?